Q.C. 138

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Departmental Test for Members of the Staff of the Tamil Nadu Khadi and Village Industries Board - First Paper on Gandhiji's Collected Works Volume - V (Tamil) (Tamil version only) (Without Books) | 158 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. அகிம்சையின் சின்னமாக இராட்டை அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு?

(A) 1921 (B) 1919

(C) 1929 (D) 1927

2. காந்திஜி கையெழுத்தை பெறுவதற்கு கதர் அணிய வேண்டும் என்ற நிபந்தனையினை எந்தநாட்டு மாணவர்களுக்கு காந்திஜி விதித்தார்?

(A) அமெரிக்கா (B) ரஷ்யா

(C) ஆப்பிரிக்கா (D) இங்கிலாந்து

3. "பூலோக சுவர்க்கம்" என மகாத்மா எதைக் குறிப்பிடுகிறார்?

(A) கதர் அணிவது (B) கதர் உற்பத்தி செய்வது

(C) பட்டு அணிவது (D) பட்டு உற்பத்தி செய்வது

4. மகாத்மா இந்தியாவின் மிக ஆழமாக வேர் ஊன்றி போய்விட்ட நோய் என எதை குறிப்பிடுகிறார்?

(A) குடிப்பழக்கம் (B) தீண்டாமை

(C) மூளைசுரம் (D) வறுமையில் பட்டினி

5. பிரிட்டிஷ் சரக்குகள் விற்பனையாக சிறந்த இடம் என பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி கூறிய நாடு எது?

(A) ஜப்பான் (B) ஆப்பிரிக்கா

(C) அமெரிக்கா (D) இந்தியா

6. இந்தியாவில் பிரிட்டிஷ் பருத்தி ஜவுளி விற்பனை குறைய மிக முக்கிய காரணம் எது என ஸ்ரீ ராபர்ட்ஸன் குறிப்பிடுகிறார்?

(A) யுத்தம் (B) பணக்கஷ்டம்

(C) ஏழ்மை (D) கதர் துணி

7. மில் துணிக்கு பதிலாக கதர் துணியினை நிலைக்கச் செய்ய சர்க்கார் சங்கத்தின் கடமையாக குறிப்பிடுவது எது?

(A) கதர் விற்பனை அதிகரிப்பது

(B) இராட்டைகள் பழுது பார்க்க சொல்லிக் கொடுப்பது

(C) கதர் உற்பத்தியை அதிகரிப்பது

(D) மில் துணியினை தவிர்ப்பது

8. இந்தியா எந்த நாட்டிடமிருந்து இரும்பு எஃகு, ரெயில்வே சாமான்களை அதிகமாக இறக்குமதி செய்ததது?

(A) இந்தியா
(B) ரஷ்யா
(C) கனடா
(D) பிரிட்டிஷ்

9. இராட்டையின் தீவிர பக்தர் என மகாத்மா குறிப்பிடும் பிரபல விஞ்ஞானி யார்?

(A) கஸ்தூரி பாய்
(B) மீராபென்
(C) டாக்டர் பி.ஸி.ரே.
(D) கோதே

10. "பொருளாதார சூரிய மண்டலம்" என காந்திஜி குறிப்பிடும் தொழில் எது?

(A) விவசாயம் செய்வது
(B) மில் துணி உற்பத்தி செய்வது
(C) இராட்டை நூற்பது
(D) இயந்திரம் உற்பத்தி செய்வது

11. காந்தி நினைவு நிதியின் காரிய தரிசியாக பணியாற்றியவர் யார்?

(A) ஸ்ரீ மகாதேவ் தேசாய்
(B) ஸ்ரீ சிந்தாமணி
(C) ஸ்ரீஜி. ராமச்சந்திரன்
(D) மௌலானா

12. கதிமோட்சத்திற்கு வாசல் என மகாத்மா காந்திஜி குறிப்பிட்டது எது?

(A) கைத்தறி
(B) இராட்டை
(C) கலப்பை
(D) கோவில்

13. சுய ராஜ்யம் அடைவதற்கான சாதனம் எது என காந்திஜி குறிப்பிட்டார்?

(A) கதர்
(B) கைத்தறி
(C) தக்கனி
(D) இராட்டை

14. எந்த நூற்றாண்டில் "ஜனநாயக ஆட்சி நடந்து வந்த இந்தியாவின் கிராமங்களில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்று நம்புவது சிரிப்பிற்கு இடமானது" என மகாத்மா குறிப்பிட்டார்?

(A) 16 ஆம் நூற்றாண்டு
(B) 17 ஆம் நூற்றாண்டு
(C) 15 ஆம் நூற்றாண்டு
(D) 19 ஆம் நூற்றாண்டு

15. 1930-ல் இந்திய மக்கள் எந்த நாட்டு பொருள்கள் வாங்குவதை புறக்கணித்தனர்?

(A) அமெரிக்கா
(B) பிரிட்டிஷ்
(C) ஜெர்மன்
(D) ஜப்பான்

16. ஜவுளி மில் அதிகம் உள்ள பகுதி என மகாதேவ தேசாய் எந்த ஊரை குறிப்பிட்டுள்ளார்?

(A) ஊத்துக்குளி
(B) அமலநேர்
(C) பீஜாப்பூர்
(D) அக்பர்பூர்

17. நூற்கும் மில்களுக்கு போட்டி என காந்திஜி எதை குறிப்பிட்டிருக்கிறார்?

(A) கைராட்டை
(B) கைத்தறி
(C) தக்ளி (சுழழும் கருவி)
(D) பட்டுதறி

18. தத் எழுதிய நூலின் பெயர் என்ன?

(A) ஐரோப்பாவின் பொருளாதார சரித்திரம்
(B) இந்தியாவின் பொருளாதார சரித்திரம்
(C) வங்காளத்தின் பொருளாதார சரித்திரம்
(D) பாகிஸ்தானின் பொருளாதார சரித்திரம்

19. உழைப்பின் கௌரவம் என காந்திஜி குறிப்பிட்டது எது?

(A) கைத்தறி
(B) தையல் இயந்திரம்
(C) இராட்டை
(D) ஏர்

20. ஸர்.எம். விஸ்வேஸ்வரய்யா அவர்கள் ஓர் அமெரிக்கருக்கு எத்தனை அடிமைகள் இருப்பதாக கூறினார்?

(A) 33 அடிமைகள் (B) 30 அடிமைகள்
(C) 36 அடிமைகள் (D) 32 அடிமைகள்

21. கிராம கைத்தொழிலுடன் பெரிய தொழிற்சாலைகளும் ஏற்பட வேண்டும் என கூறியவர் யார்?

(A) மகாத்மா காந்தி (B) ஜவஹர்லால் நேரு
(C) லோக்மானியதிலகர் (D) பாலகங்காதர திலகர்

22. எந்த நூற்றாண்டில் மக்களின் தேசிய தொழிலாக நெசவு இருந்து வந்தது என மகாத்மா குறிப்பிடுகிறார்?

(A) 16 ஆம் நூற்றாண்டு (B) 20 ஆம் நூற்றாண்டு
(C) 19 ஆம் நூற்றாண்டு (D) 17 ஆம் நூற்றாண்டு

23. இந்திய பார்ஸி சமூகத்தினை சார்ந்த "தோழர்" சக்லத் வாலா வக்கீல் தொழிலை எங்கு நடத்தி வந்தார்?

(A) இந்தியா (B) இங்கிலாந்து
(C) ஆப்பிரிக்கா (D) ரஷ்யா

24. மகாத்மா பர்டோலியிலிருந்து ஸர் டானியல் ஹாமில்டனுக்கு எந்த ஆண்டு இராட்டையை குறித்து கடிதம் எழுதினார்?

(A) 1922 (B) 1921
(C) 1919 (D) 1932

25. இராட்டை தேசிய கொடியில் இடம்பெற்ற ஆண்டு?

(A) 1919 (B) 1931
(C) 1921 (D) 1975

26. "காந்திஜியுடன் ஒரு நாள் காலை" என்ற தலைப்பில் கட்டுரை யாரால் எழுதப்பட்டது?

(A) ஸ்ரீ சிந்தாமணி (B) ஸ்ரீ மகாதேவ் தேசாய்
(C) மௌலானா (D) கோதே

27. சுதேசி திட்டத்தின் வெற்றிக்கு அவசியம் என மகாத்மா காந்தி குறிப்பிடுவது எது?

(A) பட்டு உபயோகிப்பது
(B) மில் துணி உபயோகிப்பது
(C) கதர் உபயோகிப்பது
(D) வுல்லன் உபயோகிப்பது

28. மகாத்மா பஞ்சாப்பில் எந்த ஆண்டு ஆண்களை நூல் நூற்கும்படி கேட்டுக்கொண்டார்?

(A) 1910-1911
(B) 1920-1921
(C) 1930-1931
(D) 1921-1922

29. இராட்டையில் நூற்பவர்களை கண்டுபிடித்த பெண்மணி யார்?

(A) கஸ்தூரிபாய்
(B) மார்க்கரெட்
(C) மீராபென்
(D) கங்காபென் மஜ்முதார்

30. அந்நிய துணி பகிஷ்காரம் யாருடைய நினைவாக ஆரம்பிக்கப்பட்டது?

(A) வ.உ. சிதம்பரம் பிள்ளை
(B) சர்தார் வல்லபாய்படேல்
(C) லோகமான்ய திலகர்
(D) ஜவஹர்லால் நேரு

31. மகாத்மா ஏராவ்டா இராட்டையில் எந்த ஆண்டு நூல் நூற்றார்?

(A) 1935
(B) 1930
(C) 1942
(D) 1940

32. மகாத்மா காந்தி தொப்பியையும், சட்டையையும் துறந்த இடம் எது?

(A) திருப்பூர்
(B) போர்பந்தர்
(C) பம்பாய்
(D) மதுரை

33. கையினால் நூற்கும் இராட்டை புத்துயிர் பெற்ற இடம் எது?

(A) சமர்பதி
(B) வீஜாப்பூர்
(C) அலகாபாத்
(D) அமலநேர்

34. ஷான் கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் பெண்கள் அணிவது?

(A) அந்நிய துணி
(B) கைத்தறி துணி
(C) பட்டு துணி
(D) பாலியஸ்டர் துணி

35. "ஓய்வு நேரத்தை பயன்படுத்தும் முறையும் கலையும்" என்ற கட்டுரையை எழுதியவர் பெயர் என்ன?

(A) ஸ்ரீஎல் பி ஜாக்ஸ்
(B) ஜான் ரஸ்கின்
(C) மகாதேவ தேசாய்
(D) டிரமண்ட்

36. இந்தியாவில் மிக உயர்ந்த ஜம்தானி வேலை நெசவு நடைபெற்ற இடம் எது?

(A) மோராதாபாத்
(B) அக்பர்பூர்
(C) பிஜ்னோர்
(D) தண்டா

37. மகாத்மா வேலூரில் செய்த பிரசங்கத்தில் எதை முதலாவதாக குறிப்பிட்டார்?

(A) தீண்டாமை
(B) குடிப்பழக்க குறைப்பு
(C) கதர்
(D) அந்நியதுணி பகிஷ்காரம்

38. பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரியாக பணியாற்றியவர் யார்?

(A) ஸ்ரீ ஏ.எம். சாமுவேல் லிங்கன்
(B) ஸ்ரீ கேஸி
(C) டிரமன்ட்
(D) யூ ஜான்சன்

39. இந்தியாவின் ஜனத்தொகையில் எத்தனை சதவிகிதம் பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தார்கள்?

(A) 68%
(B) 72%
(C) 62%
(D) 78%

40. மகாத்மா கலந்து கொண்ட இரண்டாவது வட்டமேசை மாநாடு நடைபெற்ற ஆண்டு எது?

(A) 1921
(B) 1931
(C) 1919
(D) 1925

41. மஸ்லின் துணிக்கு பெயர் போன இடம் எது?

(A) பாட்னா
(B) மதுரை
(C) ஊத்துக்குளி
(D) டாக்கா

42. இயற்கையோடு இயைந்து வாழ்வதை லட்சியமாக கொண்ட தத்துவ ஞானியின் பெயர் என்ன?

(A) ஹென்றி டேவிட் தோரோ
(B) மௌலானா
(C) சிந்தாமணி
(D) ஸ்ரீ மகாதேவ் தேசாய்

43. "கடையனுக்கும் கதிமோட்சம்" என்ற நூலை எழுதியவர் யார்?

(A) ஜான் ரஸ்கின்
(B) ரவீந்திரநாத் தாகூர்
(C) சிந்தாமணி
(D) ஸ்ரீ மகாதேவ தேசாய்

44. மகாத்மா தென்நாட்டிற்கு சுற்றுப்பயணம் செய்த ஆண்டு?

(A) 1927
(B) 1919
(C) 1917
(D) 1928

45. காந்தியடிகள் கதரே சுதேசியின் மையம் என்பதை எந்த ஆண்டு உணர்ந்தார்?

(A) 1910
(B) 1925
(C) 1900
(D) 1915

46. 1927-28-ல் இந்தியாவில் பருத்தி, உணவு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், தோல், உலோகப் பொருட்கள் போன்றவை எத்தனை கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது?

(A) 231 கோடி
(B) 331 கோடி
(C) 309 கோடி
(D) 209 கோடி

47. "மகாத்மாவை அகிம்சா மூர்த்தி" என குறிப்பிட்ட பிரிட்டிஷ்காரர் யார்?

(A) லார்டு கர்ஜான்
(B) எம்.எஸ். சாமுவேல் லிங்கன்
(C) ஸ்ரீ ஜான் கன்
(D) ஸ்ரீ ராபர்ட்ஸன்

48. பாம் டி மலோர்க்காவின் கடலை அடுத்துள்ள மாதா கோவிலில் மனித சிலந்தி பரம்பரையில் வந்தவன் எத்தனை தலைமுறையாக நூல் நூற்பதாக பத்திரிக்கை செய்தியில் குறிப்பிட்டுள்ளது?

(A) 10
(B) 15
(C) 20
(D) 25

49. தோழர் சக்லத்வாலா மகாத்மாவின் இயக்கத்திற்கு எதிராக பிரசாரம் செய்திட இங்கிலாந்திற்கு எந்த ஆண்டு சென்றார்?

(A) 1917
(B) 1920
(C) 1927
(D) 1909

50. பல்நெடுங்காலம் நிலைபெற்று நிற்பானதோர் இராட்டை என பாடிய கவிஞர் பெயர் என்ன?

(A) இரவீந்திரநாத் தாகூர்
(B) கோதே
(C) ஸ்ரீ மகாதேவ் தேசாய்
(D) மௌலானா

51. தார்வார் ஜில்லாவில் உள்ள கைத்தறி நெசவுப்பயிற்சி கூடத்தில் ஒரே சமயத்தில் எத்தனை நபர்கள் பயிற்சி பெற்றனர்?

(A) 10
(B) 12
(C) 8
(D) 14

52. முஸ்லீம் ஆட்சியின்போது இராட்டை எதன் சின்னமாக இருந்தது?

(A) அகிம்சையின் சின்னம்
(B) வறுமையின் சின்னம்
(C) வெற்றியின் சின்னம்
(D) உழைப்பின் சின்னம்

53. கத்தியவார் மூன்றாவது ராஜ்ய மாநாடு மகாத்மா தலைமையில் எங்கு நடைபெற்றது?

(A) டாக்கா
(B) அமலநேர்
(C) பவநகர்
(D) ஸ்ரீநகர்

54. "இந்தியாவின் முதுபெரும் கிழவர்" என்று போற்றப்படுபவர் யார்?

(A) மகாத்மா காந்தி
(B) சர்தார் வல்லபாய்படேல்
(C) தாதாபாய் நௌரோஜி
(D) வ.உ. சிதம்பரம் பிள்ளை

55. அகில இந்திய நூற்போர் கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் மாதத்திற்கு எத்தனை கெஜம் நூல் நூற்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது?

(A) 2000
(B) 1500
(C) 800
(D) 1000

56. அந்நிய துணி பகிஷ்காரம் எங்கு ஆரம்பிக்கப்பட்டது?

(A) கல்கத்தா
(B) டில்லி
(C) குஜராத்
(D) பம்பாய்

57. மகாத்மா காந்தி அந்நிய துணிகளை தகனம் செய்த சடங்கை நடத்திய ஆண்டு?

(A) 1916
(B) 1917
(C) 1930
(D) 1921

58. சபர்மதி ஆசிரமவாசிகள் இரவும் பகலும் இடைவிடாது நூல் நூற்று தேசிய வாரம் கொண்டாடிய ஆண்டு எது?

(A) 1926
(B) 1916
(C) 1912
(D) 1936

59. 1919-20 ல் இந்தியர் ஒருவர் தலைக்கு சராசரியாக எவ்வளவு கெஜம் துணியினை உபயோகித்தார்?

(A) 9 கெஜம்
(B) 13.08 கெஜம்
(C) 13 கெஜம்
(D) 8.8 கெஜம்

60. காங்கிரஸ் காரிய கமிட்டியால் சூரத் ஜில்லாவில் சட்ட மறுப்பு போராட்டம் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

(A) 1922
(B) 1915
(C) 1921
(D) 1927

61. பண்டித மோதிலால் அங்காடிக்காரர் போல் கதர் விற்றபோது உடனிருந்தவர் பெயர் என்ன?

(A) சர்தார் வல்லபாய் படேல்
(B) தாதாபாய் நௌரோஜி
(C) ஸ்ரீ ரெங்கசாமி அய்யங்கார்
(D) ஸ்ரீ ராமச்சந்திரன்

62. தார்வார் ஜில்லாவில் ஹோஷாலில் கைத்தறி நெசவினை ஓய்வு நேர தொழிலாக யாருக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது?

(A) நாவிதர்கள்
(B) விவசாயிகள்
(C) தச்சர்கள்
(D) சலவை தொழிலாளர்கள்

63. கதர் நமது விடுதலையின் சின்னம் என கூறியவர் யார்?

(A) மகாத்மா காந்திஜி
(B) லோக் மான்ய திலகர்
(C) ஜவஹர்லால் நேரு
(D) லால்பகதூர் சாஸ்திரி

64. ஸ்ரீ கேஸி எந்த நாட்டின் வெளிநாட்டு மந்திரியாக இருந்தார்?

(A) ஆஸ்திரேலியா
(B) ஆப்பிரிக்கா
(C) ஐரோப்பா
(D) இத்தாலி

65. வடக்கு ஆசியாவில் பிறந்த மங்கோலிய வீரர் பெயர் என்ன?

(A) செங்கிஸ் கான்
(B) ஸ்ரீ ராபர்ட் பென்
(C) கோதே
(D) டிரமண்ட்

66. "உண்மையின் அறைகூவல்" நூலில் இரவீந்திரநாத் தாகூர் எழுதிய கட்டுரையானது?

(A) கதரை ஆதரிப்பது
(B) கதரை எதிர்ப்பது
(C) மில் துணியினை எதிர்ப்பது
(D) பட்டு துணியினை எதிர்ப்பது

67. "கில்ட்ஸ்" எனும் தேசிய உடை எந்த நாட்டை சார்ந்தது?

(A) ஆப்பிரிக்கா
(B) அமெரிக்கா
(C) நெதர்லேண்ட்
(D) ஸ்காட்லாண்ட்

68. காங்கிரஸின் வேலைதிட்டத்தில் இராட்டை எந்த ஆண்டு இடம் பெற்றது?

(A) 1929
(B) 1918
(C) 1921
(D) 1927

69. தேசிய வாரம் கொண்டாட்டத்தில் அதிகமாக நூற்ற 16 வயது பையன் கடைசி நாளன்று நூற்ற நூலின் சுற்றுக்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(A) 9119
(B) 6000
(C) 7000
(D) 12160

70. காந்திஜியுடன் சுற்றுப்பயணம் செய்த மௌலானா முகமது அலி எந்த ஆண்டு கைது செய்யப்பட்டார்?

(A) 1924
(B) 1921
(C) 1931
(D) 1915

71. கைத்தறிக்கு பதிலாக விசைத்தறிகளை அமைப்பது தவிர்க்க இயலாது என லார்டு கர்ஜான் எங்கு கூறினார்?

(A) டில்லி தர்பார்
(B) குஜராத் தர்பார்
(C) மும்பை தர்பார்
(D) வங்காள தர்பார்

72. மகாத்மா பர்டோலி சத்தியாகிரக போராட்டத்தினை கைவிட காரணமான தேசிய ஊர்வலம் எங்கு நடைபெற்றது?

(A) அமரநேர்
(B) சௌரிசௌரா
(C) பீஜாப்பூர்
(D) தண்டா

73. "ஆன்மீக நூலின் இயற்கை தர்மம்" என்ற நூலை எழுதியவர் யார்?

(A) டாக்டர் பிஸிரே
(B) ஸ்ரீ ஸி பாலாஜி
(C) டிரமண்ட்
(D) ஜான் ரஸ்கின்

74. "மகாத்மாவின் கதர் திட்டம்" தீர்மானம் ஆகிய இந்திய நூற்போர் சங்கத்தினரால் __________?

(A) ஏற்றுக்கொள்ளப்பட்டது
(B) கைவிடப்பட்டது
(C) தள்ளிவைக்கப்பட்டது
(D) மாற்றி அமைக்கப்பட்டது

75. அகில இந்திய நூற்போர் கூட்டுறவு சங்க ஊழியர் ஒரு மாதத்திற்கு குறைந்தபட்சம் நூற்க வேண்டிய சிட்டம் எவ்வளவு?

(A) 6 சிட்டம்
(B) 10 சிட்டம்
(C) 30 சிட்டம்
(D) 7 ½ சிட்டம்

76. 1906 ஆம் ஆண்டு "சுயராஜ்யம்" என்ற பதத்தை முதன் முறையாக பிரகடனம் செய்தவர் யார்?

(A) ஜவஹர்லால் நேரு
(B) தாதாபாய் நௌரோஜி
(C) லோகமான்ய திலக்
(D) சர்தார் வல்லபாய் படேல்

77. கவி இரவீந்திரநாத் தாகூர் 1921 செப்டம்பரில் மகாத்மா காந்தியும் சந்தித்த இடம் எது?

(A) பம்பாய்
(B) குஜராத்
(C) கல்கத்தா
(D) டில்லி

78. லார்டு கர்ஸான் இந்தியாவில் எந்த பழக்கத்தைக் கொண்டு வந்தார்?

(A) மது அருந்துவது
(B) தேநீர் குடிப்பது
(C) காபி குடிப்பது
(D) புகையிலை போடுவது

79. கையால் நூற்று நெய்யும் கதர் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட இடம் எது?

(A) டாக்கா
(B) ஊத்துக்குளி
(C) பீஜாப்பூர்
(D) சமர்பதி

80. சமக்ர கிராம சேவையில் அடங்கியுள்ள நிர்மான திட்ட அம்சங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(A) 28
(B) 14
(C) 18
(D) 20

81. காந்தி இர்வின் ஒப்பந்தம் எந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது?

(A) 1931
(B) 1921
(C) 1937
(D) 1912

82. அக்பர்பூரில் கிருபாளினியின் கதர் கோஷ்டியினர் எவ்வளவு ஆண்டுகள் வேலை செய்தனர்?

(A) எட்டு
(B) ஏழு
(C) ஐந்து
(D) மூன்று

83. எடின்பரோவில் நடைபெற்ற மாநாட்டில் தலைமை வகித்தவர் பெயர் என்ன?

(A) ஸ்ரீ வில்லியம் கிர்வின்ஸ்
(B) எம்.எஸ். சாமுவேல் லிங்கன்
(C) ஸ்ரீ ஜான் கன்
(D) லார்டு கர்ஸான்

84. எலிசபெத் ராணி எந்த நாட்டின் ஜரிகையினை அவருடைய நாட்டு மக்கள் உபயோகிப்பது குற்றம் என்றார்?

(A) ஹாலந்து
(B) பின்லாந்து
(C) இத்தாலி
(D) நாகலாந்து

85. தானா ஜில்லாவின் பிவாண்டி எனும் இடத்தில் நெசவு பள்ளிக்கூடம் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

(A) 1906
(B) 1931
(C) 1916
(D) 1921

86. "இராட்டையே நமது துப்பாக்கி" என கூறியவர் யார்?

(A) மௌலானா முகம் மதலி
(B) ஸ்ரீ மகாதேவ் தேசாய்
(C) ஸ்ரீ சிந்தாமணி
(D) மகாத்மா காந்தி

87. "சுயராஜ்யம்" என்ற பதம் முதன்முறையாக எங்கு பிரகடனம் செய்யப்பட்டது?

(A) கல்கத்தா
(B) பம்பாய்
(C) பாட்னா
(D) டில்லி

88. அகில இந்திய நூற்போர் கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?

(A) 1915
(B) 1925
(C) 1927
(D) 1921

89. கிராம கைத்தொழில் பற்றிய கட்டுரைகள் எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டது?

(A) பூரண சுதேசி
(B) உண்மையான அறைகூவல்
(C) ராட்டையின் தத்துவம்
(D) கதரின் தத்துவம்

90. "அருள் ஒளியே வழிகாட்டிடு" என்ற தோத்திர பாடலை இயற்றியவர் பெயர் என்ன?

(A) ரவீந்திரநாத் தாகூர்
(B) கோதே
(C) கார்டினல் ஜான் ஹென்றி நியூமான்
(D) ஸ்ரீ மகாதேவ் தேசாய்

91. 1931-ல் சட்டமறுப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட மறு வருடம் காந்திஜியுடன் கைது செய்யப்பட்டவர் யார்?

(A) வல்லபாய் பட்டேல்
(B) வோக் மான்யதிலக்
(C) ஜவஹர்லால் நேரு
(D) மொராஜி தேசாய்

92. 1899-1900 இல் இந்தியாவில் பஞ்சம் ஏற்பட்ட போது உதவியவர் யார்?

(A) டார்வின் மேயர்
(B) இர்வின்
(C) லார்டு இர்வின்
(D) லங்காஷயர்

93. ஐக்கிய மகாணம் அக்பர்பூரில் கதர் நிலையத்தினை நடத்திய விபரம் பற்றி விவரித்தவர் யார்?

(A) மகாத்மா காந்தி
(B) லோக்மான்ய திலக்
(C) பண்டித ஜவஹர்லால் நேரு
(D) பால கங்காதர்

94. பண்டித மோதிலால் நேரு தெருக்களில் அங்காடிக்காரர் போல் கதர் விற்ற இடம் எது?

(A) டில்லி
(B) பம்பாய்
(C) கல்கத்தா
(D) அலகாபாத்

95. அலகாபாத் லீடர் என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் யார்?

(A) ஸ்ரீ மகாதேவ் தேசாய்
(B) ஸ்ரீ சிந்தாமணி
(C) ஜான்ரஸ்கின்
(D) கோதே

96. "ஸ்பின்னிங் ஜென்னி" எனும் நூற்கும் இயந்திரம் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

(A) டாக்டர் பிஸிரே

(B) கோதே

(C) ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ்

(D) கங்காபென் மஜ்முதார்

97. அகில இந்திய நூற்போர் கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்ட இடம் எது?

(A) டாக்கா

(B) மதுரை

(C) பாட்னா

(D) அலகாபாத்

98. கும்பமேளா உற்சவத்தில் காந்திஜி கலந்து கொண்ட ஆண்டு?

(A) 1915

(B) 1919

(C) 1927

(D) 1921

99. கைத்தறி நெசவில் நாடாத்தறிகள் புகுத்தப்பட்ட ஆண்டு எது?

(A) 1921

(B) 1916

(C) 1927

(D) 1931

100. கதர் இயக்கத்தினை மகாத்மா காந்தி ஆரம்பித்த ஆண்டு?

(A) 1931

(B) 1921

(C) 1911

(D) 1919

---